# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

# சீனா, ஹைனான், 2026 டிசம்பர் 03 தொடக்கம் 06 ஆம் திகதி வரை ஹைனான் குளிர் கால வர்த்தகக் கண்காட்சி 2026 இல் இலங்கை காட்சி கூடத்தை ஏற்பாடு செய்தல்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB), சீன மக்கள் குடியரசு, குவான்சூவில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்துடன் இணைந்து, 2026 டிசம்பர் 03 தொடக்கம் 06 ஆம் திகதி வரை சீன, ஹைனானில் இடம்பெறவுள்ள 2026 ஹைனான் குளிர் கால வர்த்தகக் கண்காட்சியில் இலங்கை காட்சி கூடத்தை ஏற்பாடு செய்துள்ளது.

ஹைனான் குளிர்கால வர்த்தகக் கண்காட்சி, இலங்கையின் விவசாயப் பொருட்களை ஊக்குவிப்பதற்கும், சீன சந்தையில் இலங்கையின் தயாரிப்பு வகைகளை விரிவுபடுத்துவதற்கும் சிறந்த ஒரு தளமாக அமையும். அதேவேளை, ஹைனான் மாகாணத்தின் சுதந்திர துறைமுக வசதிகளின் பயனையும் பெற முடியும்.

சீனா உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடாகும். மேலும், அது இலங்கையின் வாசனைப் பொருட்கள் மற்றும் ஏனைய விவசாயப் பொருட்களுக்காக தனது சந்தையை படிப்படியாகத் திறந்து வருகிறது. வேகமான வளர்ச்சியுடன் புதிதாக திறக்கப்பட்ட சந்தையாகவும், அதிக கொள்முதல் திறன் கொண்ட மில்லியன் கணக்கான மக்களைக் கொண்ட சந்தையாகவும் இருப்பதால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும், இலங்கையின் விவசாயப் பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

**யாருக்கானது**

பின்வரும் தயாரிப்பு வகைகளின் கீழ், சர்வதேச சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்யும் போதுமான விநியோக திறன் கொண்டவர்களும், சர்வதேச உணவு தரநிலைகளைப் பின்பற்றுபவர்களும், சீன மக்கள் குடியரசின் சுங்க பொது நிர்வாகத்தில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு நிலுவையில் உள்ள விவசாயப் பொருள் பதப்படுத்துநர்கள்/ ஏற்றுமதியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

- பதப்படுத்தப்பட்ட மற்றும் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகள் (உறையவைக்கப்பட்ட, நீரகற்றிய மற்றும் பாதுகாக்கப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள், பழச்சாறுகள், டின்களில் அடைக்கப்பட்ட மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட தயாரிப்புகள்)
- தேங்காய் அடிப்படையிலான தயாரிப்புகள் (உலர்ந்த தேங்காய் துருவல், தேங்காய் பால், தேங்காய் கிரீம் மற்றும் தேங்காய் தூள், தேங்காய் / இளநீர், சுவையூட்டப்பட்ட தேங்காய் சிப்ஸ் போன்றவை)
- சிலோன் கறுவாப்பட்டை, வாசனை சுவையூட்டிகள் பரிசும் பொதிகளில் உள்ள வாசனைப் பொருட்கள், உணவுச் சேர்மானங்கள், துரித வாசனைத் தயாரிப்புகள் உட்பட வாசனைப் பொருட்கள் மற்றும் வாசனைக் கலவைகள்.
- இனிப்புப் பண்டங்கள் மற்றும் பேக்கரி தயாரிப்புகள், சிறப்பு வசதியான உணவுப் பொருட்கள், தானியங்கள் மற்றும் தானிய அடிப்படையிலான தயாரிப்புகள், ஆரோக்கிய உணவுகள், உணவு துணைச் சேர்மானங்கள்
- பானங்கள் (மூலிகைத் தேநீர், மதுபானம் அல்லாத பானங்கள், மூலிகை பானங்கள்)

**பங்கேற்புச் செலவு**

கண்காட்சி இடம் மற்றும் நிர்மாணத்திற்கான செலவு மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து செலவுகளும் பங்கேற்கும் நிறுவனங்களால் ஏற்கப்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிதி வசதிகள் கிடைக்கும் நிலைமையைப் பொறுத்து, கண்காட்சி இடம்/ நிர்மாணச் செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கான நிதி உதவியை EDB பரிசீலிக்கலாம்.

**விண்ணப்பம் மற்றும் தேர்வு**

www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் ("Announcements" பிரிவின் கீழ்) கிடைக்கப்பெறும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்களை மேற்கொள்ளல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஹைனான் குளிர் கால வர்த்தகக் கண்காட்சி 2026" என்று குறிப்பிட்டு 2026 ஓகஸ்ட் 12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் EDB, ஏற்றுமதி விவசாய - பணிப்பாளருக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்கள், இத்திட்டத்திற்கான பொருத்தமான பங்கேற்பாளர்களைத் தேர்வு செய்வதற்காக EDB மூலம் நியமிக்கப்பட்ட குழுவினால் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு மின்னஞ்சல்: gayanw@edb.gov.lk, 077-2120943, 011-2300732, 011-2300705-11 – நீடிப்பு: 386 உதவிப் பணிப்பாளர்/ திரு கயான் வீரசிங்கவை தொடர்புகொள்ளவும்.

**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**

**இல. 42, EDB/NDB கோபுரம், நவம் மாவத்தை, கொழும்பு 02**

**இணையதளம்: www.srilankabusiness.com**